முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1002

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.06.2022, திங்கட்கிழமை

1. தர்மவேலிகொண்ட அரங்கனே
தவசியாய் வாழுகின்ற தேசிகனே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரபஞ்சத்தின் பிரணவ சக்தியாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 13 நாள், 27.06.2022 திங்கட்கிழமை)
வரம்தந்து ஆறுமுகன் யான் உன்னை
வழிநடத்தி நித்தம் அருள் பாதுகாப்புத் தர
3. தருகவே அரங்கன் உன்னருள் ஞானம்
தரணியில் முன்மொழிந்து வருபவரெல்லாம்
சரவணச்சுடரேற்றி வணங்குபவரெல்லாம்
சாற்றிடுவேன் ஞானிகளாகி கலியுகத்தில்
4. கலியுகத்தில் அரங்கன் உன் அவதார
கருணைமிக்க வழிகளை பின்பற்றி
பேருலக மாற்ற சேவையில்
பெரும்பங்கு கொண்டு சிறந்திடுவர்
5. ஆகவே அரங்கன்பால் தீட்சைபெற்ற
அனைவருக்கும் ஆறுமுகன் என் ஆசி உண்டு
வரமென உன் தர்மத்தை வழிமொழிந்து
வையகத்தில் செய்து வரும் அன்பர்கட்கெல்லாம்
6. எல்லோருக்கும் ஆறுமுகன் என் அருட்தயவு உண்டு
இடராக வினைவழி அவர்கள் அனுபவிக்கும்
அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தையும்
அகற்றி ஆறுமுகன் யான் வழி நடத்துவேன்
7. வழிநடத்தி அவர்களுக்கெல்லாம் ஞானவாழ்வு
வரமாக அரங்கன் உன் கரம்பட தந்தருள்வேன்
அருளாக ஆற்றலாக அரங்கன் நீ
அகிலத்தை காக்கும் உயர் சேவை ஆற்றிவர
8. மாற்றம் தந்து ஆறுமுகன் உன்னுள்ளே
மகா சூட்சுமமாய் பேரொளியாய்
அற்புதத்தை நிகழ்த்தி உலகை காப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–